# சட்ட உதவிச் சான்றிதழ் என்றால் என்ன?

நீங்கள் ஒண்டாரியோவைச் சேர்ந்த குறைந்த வருமானம் பெறுபவராயின், ஒண்டாரியோ சட்ட உதவி (LAO) நிறுவனத்தின் சான்றிதழைப் பெறுவதற்கு நீங்கள் தகுதியானவராக இருக்க முடியும். நீங்கள் உங்களது சட்ட உதவி ஒண்டாரியோ (LAO) நிறுவனத்தின் சான்றிதழை, சட்ட உதவி வழக்குகளை ஏற்கும் தனியார் பயிற்சியில் ஈடுபட்டுள்ள வழக்கறிஞரொருவரிடம் எடுத்துச் செல்ல அல்லது அவருக்கு அனுப்ப முடியும். வழக்கறிஞர் அச்சான்றிதழை ஏற்றுக் கொள்வாராயின், அது சட்ட நடவடிக்கையொன்றில் விசாரணை வரையில் மற்றும் விசாரணை அடங்கலாக குறித்ததொரு தொகை மணித்தியாலங்களுக்கு உங்களைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கு அவர் உடன்படுகின்றார் என்பதைக் குறிக்கும்.

## உங்கள் சான்றிதழை எவ்வாறு பயன்படுத்துவது

சட்ட உதவிச் சான்றிதழை ஏற்றுக் கொள்ளும் வழக்கறிஞர்களில் (அனைத்து வழக்கறிஞர்களும் ஏற்றுக் கொள்வதில்லை) நீங்கள் தெரிவு செய்யும் எந்தவொரு வழக்கறிஞரிடமும் நீங்கள் சான்றிதழை ஒப்படைக்க முடியும். அச்சான்றிதழ் குறித்ததொரு பிரச்சினை அல்லது வழக்குக்கு உரியதாகும் - மாறாக எதிர்காலத்தில் எழக்கூடிய சட்டப் பிரச்சினைகளுக்குரியதன்று.

# தொடர்புகளுக்கு

டொரண்டோவிலுள்ள
தொலைபேசி **416-979-1446**

கட்டணமற்ற தொலைபேசி
**1-800-668-8258**

**www.legalaid.on.ca**

## உங்கள் வழக்கறிஞரிடமிருந்து எவற்றை எதிர்பார்க்கலாம்


**உங்கள் வழக்கறிஞர்:**

- ✓ உங்கள் குறிப்பான பிரச்சினையை அல்லது வழக்கை ஆழமாக மீளாய்வு செய்து உங்கள் முன்னாலுள்ள தெரிவுகளை விளக்க வேண்டும்
- ✓ சட்டத்தின் அடிப்படையில் உங்களுக்காகப் பேசவும் உங்களுக்கு உரித்தானவற்றை நீங்கள் பெறுதவதற்கும் உதவ வேண்டும்
- ✓ உங்கள் வழக்கின் முன்னேற்றம் பற்றி அறிவிப்பதற்காக உங்களுடன் தொடர்பைப் பேண வேண்டும்
- ✓ நீங்கள் மீண்டும் நீதிமன்றத்துக்கு எதற்காக எப்போது வரவேண்டும் என்பதை முன்கூட்டி உங்களுக்குச் சொல்ல வேண்டும்
- ✓ ஒவ்வொரு விசாரணைக்காகவும் அல்லது நீதிமன்ற வருகைக்காகவும் உங்களைத் தயார்படுத்த வேண்டும்
- ✓ அவருக்குப் பதிலாக வேறு யாராவது நீதிமன்றத்துக்கு வரும்போது அது தொடர்பில் உங்களுக்கு அறிவிக்கவும் அந்த ஆள் தகுதியானவராகவும் தயார் நிலையிலுள்ளவராகவும் இருப்பதை உறுதிப்படுத்தவும் வேண்டும்
- ✓ உங்களால் அவரைத் தொடர்பு கொள்ள முடியாதவிடத்து அவரின் அல்லது வேறு ஆட்களின் தொடர்பு கொள்வதற்கான தகவல்களை உங்களுக்கு வழங்க வேண்டும்
- ✓ உங்களை கௌரவமாகவும் மரியாதையாகவும் நடாத்த வேண்டும்
- ✓ நீங்கள் அங்கவீனராக இருப்பின், உங்கள் தேவைகளை நிறைவேற்ற வேண்டும்
- ✓ உயர்தொழில்சார் பண்புகளுடன் நடந்துகொள்ள வேண்டும்.

## எமது முறைப்பாட்டுத் திணைக்களத்துக்கு அழைத்திடுங்கள்

பெரும்பாலான வழக்கறிஞர்கள் உயர்தொழில்சார்ந்த, தரமான சேவையினை வழங்குகின்றனர். எவ்வாறாயினும், நீங்கள் பின்வருவனவற்றில் ஏதேனும் ஒரு பிரச்சினையை எதிர்கொள்வீர்களாயின், தயவுசெய்து **416-204-7104** அல்லது **1-866-874-9786** என்ற தொலைபேசி இலக்கங்களின் ஊடாக அல்லது **complaints@lao.on.ca** என்ற மின்னஞ்சல் முகவரியின் ஊடாக எமது முறைப்பாட்டுத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்:

- × உங்களிடம் பணம் கேட்பாராயின்; உங்கள் சான்றிதழ் சட்ட உதவி ஒன்றாரியோ (LAO) மூலம் கட்டணம் செலுத்தப்படுவதற்கான உரிமையை உங்கள் வழக்கறிஞருக்கு வழங்குகின்றது
- × பொருத்தமற்ற வார்த்தைகள் அல்லது செயற்பாடுகள் மூலம் உங்களை சங்கடத்துக்கு உள்ளாக்கும் விதத்தில் நடந்துகொள்வாராயின்
- × ஒரு தீர்மானத்தை எடுப்பதில் தேவையற்ற விதத்தில் அவசரப்படுவாராயின்
- × வெற்றி நிச்சயம் என உத்தரவாதமளிப்பாராயின் (எந்தவொரு வழக்கறிஞரும் அவ்வாறு செய்ய முடியாது).



LEGAL AID ONTARIO
AIDE JURIDIQUE ONTARIO

# பொருத்தமான சட்ட உதவி வழக்கறிஞரைக் கண்டறிதல்

இந்த முக்கியமான தொழில்சார் நிபுணரை எவ்வாறு கண்டுபிடிப்பது, உங்கள் வழக்கு விடயத்தில் அவரால் என்ன செய்ய முடியும், உங்கள் உறவுமுறையை எவ்வாறு அமைத்துக் கொள்வது என்பவற்றை அறிந்து கொள்ளுங்கள்.

# பொருத்தமான சட்ட உதவி வழக்கறிஞரொருவரைக் கண்டறிதல்

வழக்கறிஞரொருவரைக் கண்டறிவதற்கு பல வழிமுறைகள் உள்ளன. உதாரணமாக நீங்கள்:

- வழக்கறிஞரொருவரைத் தேடுதல் **(legalaid.on.ca/find)** என்ற எமது கருவிக்குச் சென்று உங்கள் அமைவிடத்தையும் உங்களுக்கு உதவி தேவைப்படும் சட்டத் துறையையும் உள்ளீடு செய்யுங்கள்; அப்போது உங்கள் பிரதேசத்திலுள்ள பத்து வழக்கறிஞர்களின் பட்டியலொன்று உங்களுக்கு கிடைக்கும்
- நீங்கள் நீதிமன்றத்திற்கு வருகை தரவேண்டியிருப்பின், நீதிமன்றத்திலுள்ள மக்களுக்கு உதவி செய்யும் (கடமையிலுள்ள ஆலோசனை வழக்கறிஞர் என்றும் அழைக்கப்படுகின்ற) வழக்கறிஞரிடம் உசாவுகைப் பட்டியலொன்றைக் கோருங்கள்
- மேல் கனடா சட்டச் சமுதாயத்தின் (Law Society of Upper Canada) ஆன்லைன் சேவைக்குச் சென்று ஆன்லைன் கோரிக்கையொன்றை முன்வைப்பதைத் தெரிவு செய்யுங்கள் **(lsrs.lsuc.on.ca/lsrs/)**. அப்போது நீங்கள் LSUC -இன் உசாவுகைப் பக்கத்தைச் சென்றடைவீர்கள். அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பக்கத்துக்குச் செல்வதற்கு 'இங்கே தேடுங்கள்' என்பதன் மீது க்ளிக் செய்யுங்கள். அப்பக்கத்தின் கீழ்ப் பகுதிக்குச் சென்று, "அடுத்து" என்பதைத் தெரிவு செய்து அடுத்துவரும் சில பக்கங்களை நிரப்புங்கள். நீங்கள் சட்டத் துணையொருவரையன்றி வழக்கறிஞரொருவரைத் தான் தேடுகிறீர்கள் என்பதைக் குறிப்பிடத் தவறாதீர்கள். உங்களால் அழைப்பை ஏற்படுத்த முடியுமான வழக்கறிஞர்களின் பெயர்களைக் கொண்ட மின்னஞ்சலொன்று உங்களுக்கு கிடைக்கும்.
- உங்களால் LSUC -இன் ஆன்லைன் சேவையைப் பயன்படுத்த முடியாதவிடத்து (உதாரணமாக, தடுப்புக் காவலில், புகலிடமொன்றில் அல்லது தொலைதூர சமுதாயமொன்றில் இருப்பதன் காரணமாக) அதன் பிரச்சினைத் தொலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்துங்கள்: **1-855-947-5255** அல்லது 416-947-5255
- உங்கள் உள்ளூர் சமுதாய சட்டச் சிகிச்சை நிலையத்தில் உசாவுகைகளைக் கோர முடியும (இங்கே ஒன்றைக் காணவும்: **legalaid.on.ca/clinics**)

# பொருத்தமான வழக்கறிஞரைத் தெரிவு செய்தல்

சாத்தியமான மிகச் சிறந்த ஆளை நீங்கள் தீர்மானிப்பதற்கு இந்தக் கேள்விகள் உதவலாம்:

- சட்டத்தின் எத்துறையில் நீங்கள் சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ளீர்கள்? நீங்கள் ஒரு குற்றவியல் வழக்கறிஞரா? குடும்ப வழக்கறிஞரா? அகதிகளுக்கான வழக்கறிஞரா?
- எனது வழக்கு வகை தொடர்பில் உங்களுக்கு எவ்வளவு அனுபவம் அல்லது அறிவு உள்ளது?
- இது தான் நிகழும் என்று நான் எதிர்பார்க்கிறேன் - இது யதார்த்தமானதா?
- எனக்கு முன்னால் எத்தகைய சட்டத் தெரிவுகள் உள்ளன?
- நீதிமன்றத்தில் ஆஜராகுதல் போன்ற, எனது வழக்கின் முக்கியமான ஒரு பகுதியை உங்கள் அலுவலகத்திலுள்ள வேறு எவரேனும் கையாள்வார்களா?
- உங்கள் அலுவலகம் எங்கே உள்ளது?
- உங்களை எவ்வாறு தொடர்பு கொள்ள முடியும்?

**வேறு சில உதவிக் குறிப்புக்கள்:**

- நீங்கள் தெரிவு செய்யும் வழக்கறிஞர் உங்களுக்குப் பொருத்தமானவரா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். சட்ட உதவி ஒண்டாரியோ நிறுவனம் அரிதாகவே நீங்கள் வழக்கறிஞரொருவரை பணியமர்த்திய பின்னர் உங்கள் வழக்கறிஞரை மாற்றுவதற்கு அனுமதியளிக்கிறது.
- நீங்கள் வாடகைக்கு அமர்த்த விரும்பும் வழக்கறிஞருக்கு மாத்திரமே உங்கள் சான்றிதழை வழங்குங்கள் அல்லது உங்கள் சான்றிதழ் இலக்கத்தை அனுப்புங்கள். நீங்கள் அவ்வாறு செய்தவுடன், நீங்கள் அவரை பணியமர்த்தியாகக் கருதப்படும்.
- நீங்கள் நீதிமன்றத்தில் உள்ள போது வழக்கறிஞர்கள் உங்களை அணுகுவார்களாயின், அவர்களை பணிக்கமர்த்துவதா இல்லையா என்பதை நீங்களே தீர்மானிக்க வேண்டும். எந்தவொரு வழக்கறிஞரையும் தெரிவு செய்வதற்கான சுதந்திரம் உங்களுக்குள்ளது.
- உங்கள் வழக்கு தொடர்பான அனைத்து உண்மைகளையும் கூறுவதற்கு உங்களுக்கு நம்பகமான, வழக்கு நடைபெறுகின்ற போது முன்னிலை வகிக்கக்கூடிய, உங்களுக்கான சிறந்த தெரிவுகள் தொடர்பில் உங்களுக்கு ஆலோசனை வழங்கக்கூடிய வழக்கறிஞரொருவரைத் தேடுங்கள்.
- உங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய வழக்கறிஞரொருவரை கண்டுபிடிப்பதற்கு முன்னர் நீங்கள் ஒரு சில வழக்கறிஞர்களைச் சந்திக்க வேண்டி ஏற்படலாம்.

# உங்கள் முதற் சந்திப்பைத் திட்டமிடுதல்

**உங்கள் முதற் சந்திப்பிற்கு முன்னர் மற்றும் சந்திப்பின் போது:**

- உங்கள் நீதிமன்றப் பத்திரங்கள் அனைத்தையும் எடுத்து வாருங்கள்.
- கேட்பதற்கான கேள்விகளின் பட்டியலொன்றைத் தயாரித்துக்கொள்ளவும்.
- உங்கள் சட்டப் பிரச்சினைகளைத் தெளிவாக விளக்குவதற்குத் தயார்படுத்திக் கொள்ளுங்கள், நீங்கள் அனுப்பும் மின்னஞ்சல்களினதும் நீங்கள் ஏற்படுத்தும் அழைப்புக்களினதும் எண்ணிக்கையை மட்டுப்படுத்திக்கொள்ளுங்கள். உங்கள் சான்றிதழ் உங்கள் வழக்கறிஞருக்கு உங்கள் வழக்கின் ஒவ்வொரு கட்டத்திலும் குறித்துரைக்கப்பட்ட மணித்தியாலங்களை வழங்குகின்றது. மின்னஞ்சல்களுக்காகவும் கதைப்பதற்காகவும் செலவிடும் நேரம் இந்த மணித்தியாலங்களுக்காகக் கணிக்கப்படுவதுடன், உங்கள் வழக்கைத் தயார்படுத்துவதற்காக வழக்கறிஞர் செலவிடக் கூடிய நேரத்தை அது குறைக்கும்.
- வழக்கறிஞர் உங்களிடம் சொல்பவற்றை எழுதிக் கொள்வதற்காக காகிதமொன்றை எடுத்து வாருங்கள்.
- வழக்கறிஞரிடம் உரை மொழிபெயர்ப்பாளர் எவரும் இல்லாதவிடத்து மொழிபெயர்ப்புச் செய்வதற்காக ஒருவரை அழைத்து வாருங்கள்.
- இந்தச் சந்திப்பின் பின்னர் எப்போது எவ்வாறு தொடர்பு கொள்வது என்பதைப் பேசித் தீர்மானித்துக் கொள்ளுங்கள்.
- நீதிமன்றத்தில் ஆஜராகுதல் போன்ற உங்கள் வழக்கின் முக்கியமான ஒரு பகுதியை வேறு எவரேனும் கையாள்வார்களா என்று கேளுங்கள்.
- உங்களுக்கு விளங்காத ஏதேனு விடயங்கள் இருப்பின், விளங்கப்படுத்துமாறு கோருங்கள்.

**உங்கள் வழக்கறிஞர் பின்வருவனவற்றை விளக்குவார் என நீங்கள் எதிர்பார்க்கலாம்:**

- உங்கள் சட்ட நடவடிக்கைக்கு ஏற்புடையதாகும் சட்டங்கள்
- உங்கள் உரிமைகள்
- நீதிமன்ற நடைமுறைகள்
- உங்கள் வழக்கைத் தீர்ப்பதற்கு எவ்வளவு காலம் எடுக்கலாம்
- நீங்கள் எதிர்பார்க்க முடியுமான சாத்தியமான பெறுபேறுகளின் வீச்சு
- நீங்கள் செய்வதற்குத் தெரிவு செய்யும் மன்றாட்டத்துடன் தொடர்புடைய அபாயங்கள் (அது ஒரு குற்றவியல் வழக்கு எனின்)
- அடுத்து என்ன நடக்கும் என்பது

உங்கள் சந்திப்பு நேரத்தில் உங்களால் சமுகமளிக்க முடியாத விடத்து, தொலைபேசி மூலம் முன்கூட்டியே மற்றொரு திகதியை ஒதுக்கிக் கொள்ளுங்கள்.